1981 ஜனவரி 29]

திரு. இரெ. இராசமாணிக்கம்; பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான மரங்கள் வெட்டப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே உள்ள திருக்களம்புத்தூர் கோவிலுக்குச் சொந்தமான இலுப்பை மரங்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டி துணைக்கேள்வி போடவேண்டும். கீரந்தங்குடி மாரியம்மன் கோவிலைப் பற்றிய கேள்வி. இதில் திருக்களம்புத்தூர் கோவில் பற்றிக் கேட்கப் போனால் விடை இருக்காது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: ஒரே கோவில் நிர்வாகத்தில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கலாம். இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்திலேதான் எல்லாம் இருக்கின்றன. அதற்காக அனைத்தையும் கேட்டுவிட முடியுமா?

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், கீரந்தங்குடியில் உள்ள தென்னை, இலுப்பை போன்ற மரங்கள், அந்த ஆலயத்தினுடைய அறங்காவலர்களால் தவறான முறையில் வெட்டப்பட்டதாக புகார் ஏதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக தற்போது புகார் கொடுத்தால் உடனடியாக அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் தற்போது மாத்திரம் அல்ல, எப்போது கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் வேறு ஏதாவது ஆலயங்களில் இப்படிப்பட்ட மரங்கள் திருட்டுப் போனதாக புகார்கள் வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே' அதற்காக தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தரப்படும்.

கலைவாணர் அரங்கம், சென்னை.

*வினா எண். 87—திரு. இ. கணேசன்: மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை நகரிலுள்ள கலைவாணர் அரங்கில் பல அரிய நாடகங்களை நடத்தும் வகையில் மேடை வசதியினைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளரின் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப்புகழ் வாய்ந்த கலைவாணர் அரங்கத்தில் புகழ்மிக்க சரித்திர நாடகங்கள் நடத்தும் வகையில் மேடை வசதி இல்லை என்று நாடகக் காவலர்களால் சொல்லப்படுகிறது. அதைப் போக்கி, அரசுக்கு லாபம் ஈட்டக்கூடிய வகையில் அந்த நாடக அரங்கத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக இரண்டு மூன்று திட்டக்குறிப்புகள் அரசின் பரிசீலனைக்கு வந்துள்ளன. 1977–78 ஆம் ஆண்டிலே பொறியாளர் அவர்கள் 60,000 ரூபாய் செலவாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த நாடகத் துறையிலே ஈடுபட்டுள்ள வேறு ஒருவர் இதை 30,000 ரூபாய் செலவில் முடிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார். அதை அரசாங்கப் பொறியாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது 1981 ஆம் ஆண்டிலே இருக்கிறோம். இன்னும் அதிகமாகச் செலவாகும் என்று கருதப்படுகிறது. மேலும் அந்தக் கலைவாணர் அரங்கத்தில் வேறு பல வேலைகள் நடைபெறவிருக்கின்றன. அந்த வேலைகளைச் செய்கிறபோது, இதையும் எடுத்துக் கொள்ளலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திலே நடக்கின்ற பொருட்காட்சியைக் காண்பதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக அனுமதிச் சீட்டு கொடுத்திருப்பதைப்போல, இங்கே கலைவாணர் அரங்கத்திலே நடக்கின்ற நாடகங்கள், போடப்படுகின்ற சினிமாப்படங்களைக் காண்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச அனுமதிச்சீட்டு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகின்ற அரசு நிகழ்ச்சிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் தாராளமாக வரலாம். ஆனால் வாடகை கொடுத்து தனியார்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்கு இலவசமாக அனுமதிப்பதற்கு நமக்கு உரிமை இல்லை.

(முற்பகல் 9–20)

டாக்டர் கே. சௌரிராஜன்: அவைத் தலைவர் அவர்களே' நாடகக் கலையைப் பாதுகாப்பதற்கு வகை செய்யும் முறையில், கலைவாணர் அரங்கத்தில் புதிதாக அரங்கேற்றம் செய்யப்படுகிற நாடகங்களுக்கு குறைந்த வாடகையில் அந்த நாடகங்களை அங்கு நடத்தவும் சீன்-செட்டிங் போன்றவைகளையும்

அளிக்கவும் இந்த அரசு முன் வருமா? ஏனெனில், புதிதாக ஒரு நாடகத்தை நடத்த வேண்டுமானால ரூ. 2,000 அல்லது 3,000 ரூபாய் செலவாகிறது. ஆகவே, அந்தக் கலை அழிந்து விடாமல் பாதுகாக்கப்படுகின்ற முறையில் இந்தச் சலுகையை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்தின் மேடை விரிவு படுத்துவது பற்றிய கேள்விக்கு நான் விடையளித்துக்கொண்டு இருக்கிறேன், ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரி ராஜன் அவர்கள் நாடகக்கலைக்கு உதவி அளிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள அமைச்சர் பதில் சொல்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—ஒரு உறுப்பினர் ப்ரீ பாஸ் கேட்கிறார். மற்றொரு உறுப்பினர் நாடகக்கலைக்கு சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்கிறார்; துணை வினாக்கள் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முயற்சியின் காரணமாக நாங்கள் வெளி நாடு சென்று இருந்தபோது, பாங்காக் நகரத்தில் உள்ள ரோஸ் கார்டனில் அந்த நாட்டுக்கலைகள் என்ற முறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை அழகாக எடுத்துக்காட்டினார்கள். அதைப்போல், நம்முடைய தமிழகத்திலும் நம்முடைய நாட்டுக் கலாச்சாரம், கலை அம்சம் பொருந்திய நிகழ்ச்சிகளை வெளிநாட்டினர் புரிந்து கொள்கிற வகையில் கலைவாணர் அரங்கத்தில் வாரம் ஒரு நாள் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:—மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன், கலைவாணர் அரங்கத்தின் மேடையை விரிவுபடுத்துவது பற்றிய கேள்விக்கு நான் பதில் அளித்துக்கொண்டு இருக்கிறேன். சுற்றுலாத் துறை சம்பந்தப்பட்ட ஒரு யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி தனிக் கேள்வி போடுவார்களானால், அதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றியும், இதுவரை எடுத்துக்கொண்டு இருக்கிற முயற்சிகள் பற்றியும் அந்தத் துறையின் சார்பிலே பதில் சொல்ல முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் அரங்கத்திற்கு தற்போது போட்டி அதிகம் இருக் கிறது ஆகவே, புதிய அரங்கம் ஒன்று கட்டுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இயல் இசை நாடகமன்றத்திற்கு ஒரு கட்டிடம் அல்லது அரங்கம் ஒன்று நிரந்தரமாக அமைக்கவேண்டும்

என்று இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டு இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலிப்பதாகவும், முயற்சிப்பதாகவும் மாண்புமிகு ‘முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

காமராஜர் மண்டபம், கிண்டி.

*வினா எண் 88—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கிண்டியிலுள்ள பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நினைவாலய மண்டபத்தில் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்வி எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்ட மறைந்த தலைவர் காமராஜர் அவர்களுக்கு நம்முடைய உரிய மரியாதையைத் தெரிவிக்கிற முறையில், வருங்காலத்தில் அதிகமான மக்கள் அந்த நினைவாலயத்திற்கு வந்து அஞ்சலி செலுத்துகிற முறையில், அந்த நினைவாலயத்தை இன்னும் அழகுறச் செய்யவும் அங்கே வருகின்ற மக்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்யவும் அரசு முன் வருமா? ஒரு தேசீயத் திருநாளில் கூட அந்த மண்டபம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் கடிதம் வந்து இருக்கிறது. ஆகவே, அந்த மண்டபத்தைப் பராமரிக்க அரசு அதிக கவனம் செலுத்தி, மேலும் பல வசதிகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ‘ஆசிரியருக்குக் கடிதம்’ பகுதியில் வந்த கடிதம், காந்தி மண்டபத்தைப் பற்றியதாகும். ‘காமராஜர் நினைவாலயத்தைப் பற்றி அல்ல.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் நினைவாலய மண்டபம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 26,000 செலவில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் ஆலோசனையையும் அரசு கருத்தில் கொண்டு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.